## பெப்ரவரி – 10 – சனி

**புனித இஸ்கொலஸ்திகா**

**“நான் இம்மக்கள் கூட்டத்தின் மீது பரிவுகொள்கிறேன்.” மாற் 8:2**

**முதல் வாசகம் : 1 அரசர் 12: 26 – 32 13:33-34**

அப்பொழுது எரொபவாம் ”இப்போதுள்ள நிலை நீடித்தால் அரசு தாவீதின் வீட்டுக்கே திரும்பிச் சென்று விடும்.ஏனெனில், இம்மக்கள் எருசலேமில் உள்ள ஆண்டவரின் இல்லத்தில் பலிசெலுத்த இனிமேலும் போவார்களானால் அவர்களது உள்ளம் யூதாவின் அரசன் ரெகபெயாம் என்ற தங்கள் தலைவனை நாடும் என்னைக் கொலை செய்து விட்டு யூதாவின் அரசன் ரெகபெயாம் பக்கம் சேர்ந்து கொள்வார்கள்” என்று தன் இதயத்தில் சொல்லிக் கொண்டான்.இதைப் பற்றித் தீரச் சிந்தித்து, அவன் பொன்னால் இரு கன்றுக் குட்டிகளைச் செய்தான். மக்களை நோக்கி, ”நீங்கள் எருசலேமுக்குப் போய் வருவது பெருந்தொல்லை அல்லவா! இஸ்ரயேலரே! இதோ, உங்களை எகிப்து நாட்டிலிருந்து மீட்டுவந்த உங்கள் தெய்வங்கள்!” என்றான்.இவற்றுள் ஒன்றைப் பெத்தேலிலும் மற்றொன்றைத் தாணிலும் வைத்தான்.இச்செயல் பாவத்துக்குக் காரணமாயிற்று. ஏனெனில் மக்கள் கன்றுக் குட்டியை வணங்கத் தாண் வரையிலும் செல்லத் தொடங்கினர்.மேலும் அவன் தொழுகை மேட்டுக் கோவில்கள் கட்டி லேவியரல்லாத சாதாரண மக்களை அவற்றில் குருக்களாக நியமித்தான்.அதுவுமின்றி, யூதாவின் விழாவுக்கு இணையாக, எட்டாம் மாதம் பதினைந்தாம் நாள் எரொபவாம் ஒரு விழாவை ஏற்படுத்திப் பலிபீடத்தின் மேல் பலியிட்டான். அவ்வாறே பெத்தேலிலும் தான் செய்து வைத்த கன்றுக் குட்டிகளுக்குப் பலியிட்டான். மேலும் தான் அமைத்திருந்த தொழுகை மேடுகளின் குருக்களைப் பெத்தேலில் பணி செய்யும்படி அமர்த்தினான். இவற்றின் பின்னும் எரொபவாம் தன் தீய வழியை விட்டு விலகாமல் சாதாரண மக்களைத் தொழுகை மேட்டுக் குருக்களாக அமர்த்தினான். யார் விரும்பினார்களோ, அவர்களை அவன் திருநிலைப்படுத்த, அவர்கள் தொழுகை மேட்டுக் குருக்கள் ஆயினர். இச்செயல் எரொபவாமின் வீடு பாவத்திற்கு உள்ளாவதற்கும் மண்ணிலிருந்து அழிந்தொழிந்து போவதற்கும் காரணமாயிற்று.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் மக்கள் மீது இரக்கம் காட்டி என்னை நினைவுகூரும்

**நற்செய்தி : மாற்கு 8: 1 – 10**

அந்நாள்களில் மீண்டும் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள். உண்பதற்கு அவர்களிடம் ஒன்றுமில்லை. இயேசு தம் சீடரை வரவழைத்து அவர்களிடம்,நான் இம்மக்கள் கூட்டத்தின் மீது பரிவுகொள்கிறேன். ஏற்கெனவே மூன்று நாள்களாக இவர்கள் என்னுடன் இருக்கிறார்கள். உண்பதற்கும் இவர்களிடம் எதுவுமில்லை.நான் இவர்களைப் பட்டினியாக வீட்டிற்கு அனுப்பிவிட்டால் வழியில் தளர்ச்சி அடைவார்கள். இவர்களுள் சிலர் நெடுந்தொலையிலிருந்து வந்துள்ளனர்” என்று கூறினார்.அதற்கு அவருடைய சீடர்கள், ”இப்பாலைநிலத்தில் இவர்களுக்குப் போதுமான உணவு அளிப்பது எப்படி?” என்று கேட்டார்கள்.அப்போது அவர் அவர்களைப் பார்த்து, ”உங்களிடம் எத்தனை அப்பங்கள் உள்ளன?” என்று கேட்டார். அவர்கள் ”ஏழு” என்றார்கள்.தரையில் அமர மக்களுக்கு அவர் கட்டளையிட்டார் பின்பு அந்த ஏழு அப்பங்களையும் எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, பிட்டு, பரிமாறும்படி தம் சீடர்களிடம் கொடுக்க, அவர்களும் மக்களுக்கு அளித்தார்கள்.சிறு மீன்கள் சிலவும் அவர்களிடம் இருந்தன. அவற்றின்மீது அவர் ஆசிகூறிப் பரிமாறச் சொன்னார்.அவர்கள் வயிறார உண்டார்கள். மீதியாய் இருந்த துண்டுகளை ஏழு கூடைகள் நிறைய எடுத்தார்கள்.அங்கு இருந்தவர்கள் ஏறக்குறைய நாலாயிரம் பேர். பின்பு அவர் அவர்களை அனுப்பிவிட்டார். உடனடியாகத் தம் சீடருடன் படகேறித் தல்மனுத்தா பகுதிக்குச் சென்றார்.

**தியானம்:** இறைவன் பரிவும், இரக்கமும் உடையவர் என்பதற்கு அடையாளம் இன்றைய நற்செய்தி. அவரை நாடி வந்தவர்களை அவர் வாடிய முகத்துடன் அனுப்பி வைத்ததில்லை. அவர்கள் பசியாய் இருப்பதை உணர்ந்து அவர்களுக்கு உணவு வளங்குகிறார். இருப்பதைப் பகிர்ந்தார், அது பல்கிப் பெருகியது. நோயுடன் வந்தவர்களை குணமாக்கினார், பார்வை அற்றோருக்கு பார்வையும், காது கேளாதோருக்கு கேள்வியும் கொடுத்தார். முடவர்களை நடக்கச் செய்தார். சூம்பிய கையுடையவர்களை குணமாக்கினார். நாம் அவரை நாடி செல்லும்போது நமக்கும் நல்லது நடக்கும், மாறாக முதல் வாசகத்தில் பார்ப்பது போல் கடவுளை விட்டு விலகி வேறு தெய்வங்களை வழிபடுவோர் பாவம் செய்கிறார்கள். வேதனைகளை தாங்க முடியாமல் குறி பார்ப்பது, சாத்திரம் பார்ப்பது என்று எமது நேரத்தையும் பணத்தையும் நாம் செலவிடுகிறோம். இவை எல்லாம் கடவுளுக்கு பிரியமில்லாத செயல்களே! யாருக்கு கவலை இல்லை? உலகில் பணம் படைத்த எல்லோரும் கவலை இல்லாமல் வாழ்கிறார்களா? அண்மையில் கனடாவின் செல்வந்தர்களில் ஒருவரும் அவரது மனைவியும் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பிரச்சனை இல்லையா? நமக்கு மட்டும் ஏன் இப்படி என்று அங்கலாய்க்கிறோமே ஒழிய கடவுளைத்தேடி செல்ல தயங்குகிறோம். சிலுவைகளை சுமந்துதான் நாம் கடவுளை அடைய முடியும். எல்லாமே இலகுவாக இருந்துவிட்டால், நாம் கடவுளைத் தேட மாட்டோம். கடவுள் இருக்கிறார் என்பதையே மறந்து போய்விடுவோம். எனவே தேவை வரும்போது மட்டும் அல்ல, எப்போதும் நாம் கடவுளை நாடிச் செல்ல இன்றைய நாள் நம்மை அழைக்கிறது.